*2*

# ஜெபம்

## விசுவாசம்

*தேவனையும் விசுவாசத்தையும் நாம் தவறாகப் புரிந்துகொள்ளுவதால், நாம் ஜெபத்தில் தோல்வி அடைகின்றோம். தேவனுடைய இராஜரீகத் தன்மை வலியுறுத்தப்படாதபோது, தேவன் தமது மாபெரும் தன்மையை இழக்கின்றார், வேதாகமம் தனது அதிகாரத்துவத்தை இழக்கிறது, கீழ்ப்படிதல் தனது நன்னெறியை இழக்கிறது, மற்றும் சபை தனது முன்னுரிமையை இழக்கிறது. தேவன் மீது, தகுதியான ஒரு பயபக்தியானது மனமார்ந்த வருத்தத்தின் ஜெபத்திற்கு வளமான மண்ணாக உள்ளது. ஜெபம், தேவனுக்கு ஒரு முன்னுரிமையை வேண்டிக் கேட்கிறது.*

*ஜெபமானது, விசுவாசத்தை தக்க வகையில் புரிந்து கொள்ளுதலையும் கேட்கிறது. இன்றைய நாட்களில் மக்கள் தேவனைப் பற்றி அதிகமாகப் பேசுகின்றார்கள் - ஆனால் அது வேதாகமத்தின் தேவனைப் பற்றியதாக இருப்பதில்லை. பாவம், இழந்து போகப்பட்ட தன்மை, ஆக்கினைக்கு உட்படுதல், தேவகோபம், மற்றும் நரகம் ஆகியவை பிரபலமற்றவைகளாக உள்ளன. மக்களில் பலர் விசுவாசத்தை சமஅளவில் மேம்படுத்துகின்றார்கள் - ஆயினும் அவர்கள் "விசுவாசம் மட்டும் [போதும்]" என்பதையே ஏற்றுக் கொள்ளுகின்றார்கள். விசுவாசம் மற்றும், "விசுவாசம் மட்டும்" என்பவை மாறுபட்ட இரு கருத்துக்களாக உள்ளன. விசுவாசம் செயல்படுகிறது, ஆனால் "விசுவாசம் மட்டும்" என்பது செத்ததாக இருக்கிறது (யாக். 2:17). நாம் விசுவாசத்தினாலேயே நீதிமான்களாக்கப்படுகின்றோம், ஆனால் "விசுவாசத்தினால் மட்டும்" நீதிமான்களாக்கப்படுவது இல்லை. இது நவீன இறையியலில் மாபெரும் தவறாக உள்ளது. விசுவாசம் செயல்படுகிறது. தேவன் எப்போதுமே மனிதர்களை விசுவாசத்தினாலேயே இரட்சித்து இருக்கின்றார். விசுவாசத்தில் உள்ளடங்கியிருப்பவை என்ன? விசுவாசம் பெற்றுக் கொள்ளுகிறது ... விசுவாசம் பதில்செயல் செய்கிறது ... விசுவாசம் கீழ்ப்படிகிறது ... விசுவாசம் வாழ்கிறது. "கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது" என்று யாக்கோபு கூறினார் (யாக். 2:26). பெரும்பாலான மக்கள் இரட்சிப்பை எல்லையற்ற செயலாக, ஒரு நொடியில் ஏற்படும் விசுவாசமாக மட்டும் எல்லைக்கு உட்படுத்துகின்றார்கள். யாக்கோபின் கூற்றுப்படி, இந்த இடத்தில்தான் "விசுவாசம் செத்ததாக இருக்கிறது." விசுவாசம் என்பது ஒரு கண நேரத்திற்கானது அல்ல; விசுவாசம் என்பது வாழ்வு முழுவதற்கும் இருக்க வேண்டியதாகும். "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" (ரோமர் 1:17; கலா. 3:11; எபி. 10:38ஐக் காணவும்). விசுவாசம் செயல்படுகிறது! எபிரெயர் 11ம் அத்தியாயத்தை வாசியுங்கள்.*

*இது "புகழ்மிக்க பரலோக முற்றம்" என்பதாக உள்ளது. அங்கு விசுவாசம் செயல்பட்டது! ஜெபமும் சம அளவில் செயல்படுகிறது, ஆனால் ஜெபத்தில் மனிதர்கள் செயல்படுகின்ற போதுதான் அது[வும்] செயல்படுகிறது. ஜெபம் என்பது முயற்சியாக உள்ளது. ஜெபம் என்பது விடாமுயற்சியாக உள்ளது. ஜெபம் என்பது செயல்படுகின்ற விசுவாசமாக உள்ளது. விசுவாசமிக்க மனிதர்கள் தேவன்மீது அன்புகூர்ந்து அவரில் நம்பிக்கை வைத்த காரணத்தால் ஜெபிக்கின்றார்கள். நீங்கள் நீந்துவதினாலேயே நீந்தக் கற்றுக் கொள்ளுகின்றீர்கள். நீங்கள் ஜெபிப்பதினாலேயே ஜெபிக்கக் கற்றுக் கொள்ளுகின்றீர்கள். ஜெபம் என்பது வலிவார்ந்ததாக உள்ளது. நாம் தேவனுடைய சித்தத்தை நம்முடைய விருப்பத்திற்கு வளைப்பதில்லை; நாம் அவருடைய சித்தங்களுக்கு ஏற்ப வளைகின்றோம். ஒவ்வொன்றும் தேவனைச் சார்ந்துள்ளது என்ற வகையில் நாம் ஜெபிக்கின்றோம்; ஒவ்வொன்றும் நம்மைச் சார்ந்தது என்ற வகையில் நாம் செயல்படுகின் றோம்."எங்கள் சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல" என்று நாம் ஜெபிப்பது இல்லை; "தேவனுடைய சித்தம் பூமியில் செய்யப்படுவதாக" என்றே நாம் ஜெபிக்கின்றோம்.*

*மோசமான விஷயங்களை மிகவும் மோசமாக்குவதற்கு, பலர் விசுவாசத்தை - அவர்கள் நம்புகின்றவற்றில் நம்பிக்கை வைக்கும் - விக்கிரகங்களாகக் குறைத்து விடுகின்றார்கள். எல்லா தர்க்கங்களுக்கும் முரண்பட்ட வகையில், அவர்கள் தங்கள் விசுவாசத்தைக் குறித்துப் பெருமைப் படுகின்றார்கள் - அவர்களுடைய விசுவாசத்தில் அவர்கள் மேன்மை பாராட்டுகிறார்கள். விசுவாசம் தாழ்மையாய் இருக்கிறது. விசுவாசத்தின் மகிமை அதைக் கொண்டிருப்பவருக்கல்ல, ஆனால் அவர் எதன் மீது விசுவாசம் கொண்டிருக்கின்றாரோ, அதற்குத்தான் உரியதாகிறது. விசுவாசம் என்பது ஒரு மாயத்தோற்றம் அல்ல. ஒரு விஷயம் உண்மை யானது அல்ல என்று நீங்கள் அறிந்திருக்கையில், அதன்மீது நம்பிக்கை வைப்பதற்குப் பெயர் விசுவாசம் அல்ல. விசுவாசம் என்பது தேவனில் நம்பிக்கை வைப்பது - விசுவாசத்திலுள்ள விசுவாசம் அல்ல. விசுவாசம் உண்மை நிலையை மாற்றுவது இல்லை. விசுவாசம் நேர்மையற்ற தன்மை யாக இருப்பது இல்லை. விசுவாசம் (எடுத்துக்காட்டாக ஆபிரகாமின் விசுவாசம்) நிச்சயமானவற்றின் மீதானதாக இருப்பதில்லை. ஆபிரகாமுக்கு ஒரு சாலை வரைபடம் தரப்படவில்லை. "[அவன்] தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்" (எபி. 11:8ஆ). இது விசுவாசத்தின் சாதனையாக உள்ளது - இது நாம் நம்பிக்கை வைக்கக் கூடிய தேவனுடைய கரங்களில் நமது கைகளை ஒப்புவித்தலாக உள்ளது. "உமது உண்மை பெரியதாயிருக்கிறது" (புலம்பல் 3:23ஆ). விசுவாசம் என்பது தாழ்மையாக, சார்ந்திருத்தலாக, துறத்தலாக, கீழ்ப்படிதலாக, வாழ்வாக உள்ளது. நாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறோம், பரிசுத்தமாக்கப் படுகின்றோம், மகிமைப்படுத்தப்படுகிறோம். விசுவாசம் ஜெபிக்கிறது. ஜெபம் என்பது விசுவாசத்தின் குரலாக உள்ளது. ஜெபம் என்பது சுயத்தில் அல்ல, தேவனில் நம்பிக்கை வைத்தலாக உள்ளது. விசுவாசம் என்பது சுயத்திற்கு மரித்து, தேவனுக்கு முற்றிலுமாக ஒப்புக்கொடுத்தலாக உள்ளது.*

*நமது ஜெபம் என்பது தேவனைப் பற்றிய நமது உண்மைக் கருத்தாக உள்ளது. நமது ஜெபம் விசுவாசம் பற்றிய நமது உண்மைக் கருத்தாக உள்ளது. விசுவாசத்திற்கு எல்லாப் பதில்களும் தரப்பட்டு இருப்பது இல்லை; விசுவாசம் என்பது பதில்கள் இன்றி[யே] வாழ்வதாக உள்ளது. ஜெபமானது வாழப்படும்போது மட்டுமே கருத்துணர்வை ஏற்படுத்த முடியும். யோபு விசுவாசத்தையும் ஜெபத்தையும் முழுமையாக விளக்கப் படுத்தினார்: ''அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு 13:15). ஒரே ஒரு முடிவுதான் உள்ளது: "தேவன் வாழ்வில் மாபெரும் அறிபவராக இருக்கின்றார்!" ஜெபம் "தேவனுடைய உயர்வை" துதிக்கிறது.*

*நான் எட்டு வயதுப் பையனாக இருந்தபோது, எனது தந்தையார் என்னை, வங்கியாளரிடம் அழைத்து சென்றார். அவரிடத்தில் என் தந்தை, நான் ஒரு கூட்டாளி என்றும், என்னால் கையெழுத்திடப்பட்ட எல்லாக் காசோலைகளும் பணமாக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். என் தந்தை எனக்குக் கொடுத்தது மாபெரும் சிலாக்கியமாக இருந்தது, அது ஒரு புனிதமான நம்பிக்கையாக இருந்தது. அவர் இறக்கும் வரையில் அந்த சிலாக்கியம் என்னுடையதாக இருந்தது. அந்த சிலாக்கியத்தை நான் ஒருபோதும் தவறாகப் பயன்படுத்தியதோ அல்லது அனுகூலப்படுத்திக் கொண்டதோ இல்லை. இன்றைய நாள் வரையிலும் நான் யென்னீஸ் வங்கியில் ஒரு கணக்கு வைத்திருக்கின்றேன். என் தந்தை விரும்புவார் என்று நான் கருதும் செயல்களைச் செய்வதற்கு மட்டுமே நான் அதைப் பயன்படுத்துகின்றேன். தவறான நிரூபணம் பெற்ற பிரசங்கியார்கள், தேவனிடம் ஜெபிக்கையில் தாங்கள் கொண்டிருந்த உரிமைகோருதல்கள், உரிமைகள் மற்றும் வற்புறுத்துதல்கள் பற்றிப் பேசும்போது அது எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. ஜெபம் என்பது முரட்டுத்தனமானதோ அல்லது சுயநலமானதோ அல்ல: "அதற்காகக் கேளுங்கள் மற்றும் அதை ஏற்றுக்கொள்ளுங்கள்,'' ''அதை நம்புங்கள் மற்றும் அதைச் செய்து முடியுங்கள்." இந்தச் சொற்றொடரில் விளக்கப்படுத்தப்பட்ட கருத்துக்கள் முன் அனுமானங்களாக/தவறான யூகங்களாக உள்ளன. ஜெபத்தை ஒரு கேலிக்குரிய செயலாக ஆக்கிவிடாதீர்கள்.*

# ஜெபத்தின் வல்லமை

## யாக்கோபு 5:13-18

*“நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது” (யாக். 5:16ஆ).*

*பலவீனமான பரிசுத்தவான் முழந்தாளில் இருக்கும்போது, அதைப் பார்க்கும் சாத்தான் பயந்து நடுங்குகின்றான்.*

*வில்லியம் கௌப்பெர்*

*நாம் ஏன் அதிகமாக ஜெபிப்பதில்லை? தேவன் ஜெபத்தைக் கேட்கின்றவராக, ஜெபத்திற்குப் பதில் அளிக்கின்றவராக இருந்தால், நாம் ஏன் அதிகமாக ஜெபிப்பதில்லை? ஜெபிக்கின்றவர்களுக்கு மாபெரும் விஷயங்கள் நடக்கின்றன. ஜான் வெஸ்லி என்பவர், “தேவன் ஜெபத்தினால் எல்லாவற்றையும் செய்கின்றார், அது இன்றி அவர் ஒன்றும் செய்வது இல்லை என்ற கருத்தினால் நான் இணங்க வைக்கப்படுகின்றேன்” என்று கூறினார். ஒரு நாளில் குறைந்தது நான்கு மணி நேரமாவது ஜெபிக்காத பிரசங்கியார் மீது ஜான் வெஸ்லி மிகவும் சிறிய அளவே மதிப்பு வைத்திருந்தார். ஒரு தத்துவ ஞானி, “இந்த உலகம் கனவு காண்கின்றவற்றைக் காட்டிலும் அதிகமானவை, ஜெபத்தினால் கொண்டு வரப்படுகின்றன” என்று கணித்துள்ளார். தத்துவத்திற்கு சிந்தித்தல் எப்படியோ அப்படியே மதத்திற்கு ஜெபித்தலும் உள்ளது. நாம் ஜெபிக்க இயலாத அளவுக்கு வேலை மும்முரமாய் இருக்கிறபோது, நாம் வல்லமையைப் பெற்றுக்கொள்ள இயலாத அளவுக்கு வேலை மும்முரமாய் இருக்கின்றோம். நாம் ஏன் அதிகமாய் ஜெபிப்பதில்லை? ஒரு மனிதர் ஜெபிக்காத வரையில் தேவனுடைய பல ஆசீர்வாதங்கள் அவருக்குத் [அந்த மனிதருக்குத்] தரப்பட முடியாது.*

*தேவன் தாமே, ஜெபத்தினால் ஆழ்ந்த மனப்பதிவைப் பெறுகின்றார். அனனியாவை சவுலிடம் செல்லும்படி கூறிய வேளையில் தேவன், “... அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான்” (அப். 9:11) என்று கூறினார். ஜெபத்தைக் காட்டிலும் மனிதனிடமிருந்து வரும் வேறு எதுவும் தேவனுக்கு மிகுந்த ஆச்சரியம் உள்ளதாக இருப்பதில்லை. யோவான், “நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்” (1 யோவா.*

*5:14, 15)* என்று எழுதினார்.

*உலகத்தை மாற்றி அதை அசைத்த மனிதர்கள் ஜெபிக்கும் மனிதர்களாகவே இருந்துள்ளார்கள். தேவனுடன் பேசுதல், தேவனால் வரவேற்கப் படுதல், தேவனால் பதில் அளிக்கப்படுதல் என்பது என்ன ஒரு பயபக்திக் குரிய சிலாக்கியம்! தேவன் மனிதனுக்குக் கூட இணங்கக் கூடும்! இது பலவீனத்தின் அறிகுறி அல்ல, ஆனால் பலத்தின் வெளிப்பாடாக உள்ளது. தேவன் இதை இவ்விதமாக நடத்தவே சித்தம் கொண்டார். வாழ்வுபற்றி தேவனுடைய ஞானமான திட்டத்தில், அவர் விஷயங்களை நடக்கச் செய்வதற்கு மனித ஜெபத்தை ஒரு வழிமுறையாக உருவாக்கியுள்ளார்.*

*ஜெபம் வல்லமையுள்ளதாக இருக்கிறது, ஆயினும் நாம் ஜெபத்தில் நம்பிக்கை கொள்ளுவது இல்லை - நாம் தேவன் மீதுதான் நம்பிக்கை கொள்ளுகின்றோம். ஜெபம் சுகமளிப்பதில்லை - தேவன் சுகமளிக்கிறார். ஜெபம் என்பது நாம் தேவனிடம் சென்று சேரும் வழியாக உள்ளது. ஜெபத்தில் நாம் சர்வ வல்லமையுள்ள தேவனை நமது கூட்டாளியாக்கு கின்றோம்! இந்த அண்டசராசரத்தின் தேவன் நம்மைக் கேட்க, நமக்கு உதவ விரும்புகின்றார்! அங்குதான் ஜெபத்தில் வல்லமை உள்ளது.*

## *ஜெபியுங்கள்!*

*"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதா யிருக்கிறது" (யாக். 5:16ஆ). இதை நம்புங்கள்! இதை நடைமுறைப் படுத்துங்கள்! "எலியா என்பவன் நம்மைப் போலப்பாடுள்ள மனுஷனா யிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணினான். அப்பொழுது மூன்று வருஷமும், ஆறுமாதமும் பூமியின் மேல் மழைபெய்ய வில்லை. மறுபடியும் ஜெபம் பண்ணினான். அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது" (யாக். 5:17, 18). எலியாவுடைய ஜெபத்தின் வல்லமை இவ்வாறு இருந்தது! ஜெபம் என்பது தான் தேவனுடைய ஊழியக்காரர்களின் மிக முக்கியமான பணியாக இருக்கிறது. முதலாவது ஜெபியுங்கள்!*

*எலியா ஜெபம் செய்தார். கிரேக்க மொழியில் இதை வாசிப்பது மிகவும் ஆர்வத்திற்கு உரியதாக இருக்கிறது: "அவர் தமது ஜெபங்களில் ஜெபித்தார்." எலியா தேவன்மீது விசுவாசம் வைத்திருந்தார், எனவே அவர் ஜெபித்தார். உண்மையில், உணர்வுள்ள தன்மையில், விசுவாசத்தினால் எலியா ஜெபம் செய்தார்! எலியா ஜெபங்களைக் கூறவில்லை; அவர் தமது ஜெபங்களை ஜெபித்தார்.*

*இங்கு விலைமதிப்பற்ற இன்னொரு சிந்தனை உள்ளது: "எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும்" (வ. 17). நாம் வேதாகம வீரர்களை "சூப்பர் ஸ்டார்கள்" ஆக்க முயற்சி செய்கின்றோம். இதற்கு நேர்மாறாக, அவர்கள் நம்மைப் போன்ற மனிதர்களாகவே இருந்தார்கள். தேவன் எலியாவின் ஜெபத்தைக் கேட்டார்; தேவன் நமது ஜெபத்தை[யும்] கேட்கின்றார்! "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக்*

கவனமாயிருக்கிறது" (1 பேது. 3:12அ). மேரி அரசியார் அவர்கள், 10,000 மனிதர்கள் கொண்ட படையைக் காட்டிலும் ஜான் நாக்ஸின் ஜெபங்களுக்குத் தாம் அதிகமாக அஞ்சியதாகக் கூறினார். ஜெபத்தில் வல்லமை உள்ளது! அது நம்முடையதாக உள்ளது!

ஜெபம் ''மிகவும்'' பெலனுள்ளதாயிருக்கிறது - ''மிகவும்'' எதிர் ''கொஞ்சம்.'' ஜெபம் தேவன்மீது செயல்தாக்கம் புரிகிறது! தேவன் செயல்படுகின்றார்! ஜெபம் இந்த உலகத்தை அசைக்கிற புயங்களை அசைக்கிறது. ஜெபம் எவ்வளவு வல்லமை நிறைந்ததாக உள்ளது? தேவன் எவ்வளவு வல்லமை நிறைந்தவராக இருக்கின்றார்? எருசலேம் சபையார் ஜெபித்தபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது (அப். 4:31). நாம் கேட்பதற்கும் நினைப்பதற்கும் அதிகமானவற்றைச் செய்வதாக தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளார் (எபே. 3:20). நாம் ஏன் அதிகமாக ஜெபிப்பதில்லை? தேவனுடைய வல்லமை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தால், சபையானது எவ்வளவு வல்லமை நிறைந்ததாக இருக்கக் கூடும்? ஜெபமற்ற சபையானது வல்லமையற்ற சபையாக உள்ளது. ஜெபிக்கின்ற சபை வளராத சபையாக இருப்பதை நீங்கள் ஒருபோதும் காண முடியாது. முதலாவது ஜெபியுங்கள்! வேதாகமத்தில் நாம் தேவனுடைய 32,000 வாக்குத்தத்தங்களைக் காண்கின்றோம்! தேவன் ஜெபத்தைக் கேட்டு அதற்குப் பதில் அளிக்கின்றார். தேவனுடைய ஒவ்வொரு வாக்குத்தத்தமும் காக்கப்பட்டுள்ளது.

எலியா ஜெபம் செய்தார், மழை பெய்யாதிருந்தது; அவர் மீண்டும் ஜெபம் செய்தார், மழை பெய்தது. அவ்விரண்டு ஜெபங்களுமே அன்றாட வாழ்வை உள்ளடக்கியிருந்தன. பாலஸ்தீன நாட்டிற்கு மத்திய தரைக் கடலில் இருந்துதான் மழை வந்தது. எலியா எந்தத் திசையில் நோக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தார். ஆம், தேவனுடைய விசேஷ அருளிரக்கத்தைக் கண்ணோக்குவதில் பிரச்சனைகள் உள்ளடங்கி இருக்கின்றன. தேவனே ஒரு இரகசியமானவராக இருக்கின்றார். எலியா, அன்றாட வாழ்வில் உண்மையான மக்களுடன் ஈடுபாடு கொண்டிருந்தார். தேவன், மக்களுடன் அன்றாட வாழ்வில் செயல்படுகின்றார். என்ன ஒரு தேவன்!

ஜெபம் என்பது, ஒன்று மாபெரும் வல்லமையாய் இருக்க வேண்டும் அல்லது ஒரு மிகப் பெரும் மோசடியாய் இருக்க வேண்டும். நாம் வேலை செய்கின்றபோது, நாம் செயல்படுகின்றோம்; நாம் ஜெபிக்கின்றபோது, தேவன் செயல்படுகின்றார்! நமது ஆவிக்குரிய வல்லமையானது நமது ஜெபங்களின் இரக்கத்தில்தான் உள்ளது. ஒரு கிறிஸ்தவரை அவரது கால்களில் நிற்கச் செய்வதற்கு, அவரை முழங்காலிட வைப்பதே மிகச் சிறந்த வழியாக உள்ளது. கிறிஸ்தவர்கள் தங்கள் பிரச்சனைகளின் மீது அல்ல, ஆனால் தங்கள் வல்லமைகளின் மீது கவனம் செலுத்தியவர்களாகவே வாழ்க்கையை அணுக வேண்டும். கிறிஸ்தவர்கள் ஒன்று ஜெபிக்கின்றார்கள் அல்லது அழிகின்றார்கள். புதிய ஏற்பாட்டு சபையானது ஜெபிக்கும் சபையாக இருந்தது (அப். 2:42; 4:23-31). ஜெபமற்ற [வேதபாட] படிப்புகள், பிரசங்கங்கள், மற்றும் ஊழியங்கள் ஆகியவை பற்றி சாத்தான் பயப்படுவதே இல்லை. அவன் நமது ஊழியத்தைப் பார்த்துச் சிரிக்கின்றான்,

*நமது ஞானத்தைப் பார்த்து ஏளனம் செய்கின்றான், ஆனால் நாம் ஜெபிக்கும்போது அவன் பயந்து நடுங்குகின்றான். ஜெபத்தில் வல்லமை உள்ளது. இதை நம்புங்கள்.*

## தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கின்றார்!

*"என் ஜெபம் கேட்கப்படும் என்று நான் அதிகமாக விசுவாசிப்ப தில்லை" என்று ஒரு மனிதர், மார்ட்டின் லூத்தரிடம் குறிப்பிட்டார். அதற்கு லூத்தர், "அதுவே நீங்கள் ஜெபிப்பதற்குத் தகுந்த காரணமாக உள்ளது" என்று பதில் அளித்தார். கிறிஸ்தவரின் ஒவ்வொரு ஜெபமும் கேட்கப் படுகிறது! விசுவாசிகள் செய்யும் ஜெபங்களில் பதில் அளிக்கப்படாதவை என்று எதுவும் இருக்க முடியாது. "ஜெபிக்கப்படாத ஜெபம்" உள்ளது, ஆனால் "பதில் அளிப்படாத ஜெபம்" என்று ஒன்று ஒருபோதும் இருப்பது இல்லை. ஜெபம் என்பது தேவனுடைய தயக்கத்தை வெற்றிக் கொள்ளுதல் அல்ல; அது தேவனுடைய மனவிருப்பமாக உள்ளது. தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கின்றார்! இது நமது பிரச்சனையாக இருப்பதில்லை. தேவன் ஜெபத்திற்கு எவ்வாறு பதில் அளிக்கின்றார்?*

*(1) தேவன் ''ஆம்'' என்று பதில் அளிக்கின்றார். தேவன் (ஒரு அன்பார்ந்த தந்தையைப்போல) நாம் விரும்புகின்றவற்றைக் கொடுக்க விரும்புகின்றார். எலியா ஜெபித்தார், மழை பெய்யாதிருந்தது. எலியா [மீண்டும்] ஜெபித்தார், மழை பெய்தது. அன்னாள் ஒரு மகன் வேண்டும் என்று ஜெபித்தாள் (1 சாமு. 1:11). தேவன் சாமுவேல் மற்றும் பிற குழந்தைகளைக் கொடுத்து அவளை ஆசீர்வதித்தார். கொடுப்பதற்கென்றே தேவன் ஜீவிக்கின்றார். எசேக்கியா உயிர்வாழ வேண்டும் என்று ஜெபித்தார்; அவரது வாழ்நாளில் தேவன் பதினைந்து ஆண்டுகளைக் கூட்டிக் கொடுத்தார் (ஏசா. 38:2-5). ஆயினும், நாம் நமது ஜெபங்களுக்கான பதில்களைக் குறிப்பிட விரும்புகின் றோம். தேவன் ஒரே ஒரு வழியில்தான் பதில் தர முடியும் என்று நாம் நினைக்க விரும்புகின்றோம். பிள்ளைகள் [எது] சிறந்தது என்று அறிவது இல்லை; பெற்றோர்கள் அதை அறிகின்றார்கள். மனிதர்கள் தங்களுக்கு எது தேவை என்று அறிவது இல்லை; தேவன் அதை அறிகின்றார். தேவனுடைய ''ஆம்!'' என்பது எதிர்பாராத பலன்களாக இருக்கலாம்! நமது வாழ்வானது வேருடன் பிடுங்கப்பட்டு இருக்கலாம். இதுவே ஜெபத்தில் உள்ள "அபாயம்" ஆகும். நீங்கள் எவ்வாறு ஜெபிக்கின்றீர்கள் என்பதில் ஜாக்கிரதை யாய் இருங்கள் - நீங்கள் ஒருவேளை அதைப் பெற்றுக்கொள்ளலாம்! விசுவாசத்தின் நடையானது, நாம் எப்போதுமே தேவனிடத்திலிருந்து எதிர்பாராதவற்றைப் பெற்றுக் கொள்ளத் தயாராக இருக்கும்படி உய்த்து உணர்த்துகிறது. தேவன் ''பெட்டிக்குள்'' {boxed in?} இருப்பவராக முடியாது. உங்களால் இயலாத வகையில் அல்ல, ஆனால் உங்களால் இயன்ற வகையில் ஜெபியுங்கள். நமது வாழ்வில் தேவன் வரவேற்கப்படுகின்ற போது, எல்லா வகையான விஷயங்களும் நடைபெற முடியும். "தேவனு டைய சித்தத்திற்காக" ஜெபியுங்கள்.*

*(2) தேவன் "இல்லை" என்று பதில் அளிக்கின்றார். "இல்லை" என்பதும் ஒரு பதிலாக உள்ளது! இது ஒரு பதிலாக உள்ளது என்பதை நாம் மறுக்க விரும்புகின்றோம். ஜெபம் என்பது ஒன்றுமில்லாதவற்றிற்கு சிலவற்றைப் பெற்றுக்கொள்ளும் அளவுக்கு மலிவான வழியாக இருப்பதில்லை. தேவன் தேவனாகவே இருக்கின்றார், மனிதன் அவ்வாறு இருப்பது இல்லை. ஜெபம் என்பது, மனிதனை தேவனுக்கு எஜமானனாக ஒருக்காலும் மாற்றுவது இல்லை. பதில் அளிக்கப்பட்ட ஜெபங்களுடன் "ஆம்" என்பதை மிகவும் ஏராளமானவர்கள் ஒன்றாக்குகின்றார்கள். தந்தையர்கள் எப்பொழுதுமே தங்கள் பிள்ளைகள் கேட்கின்ற எல்லாவற்றையும் தர இயலாது. நம்மில் பலர், நாம் கேட்டவற்றை நமக்குக் கொடுக்காமல் இருந்தமைக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்தப் போதுமான அளவு நீண்ட நாட்கள் வாழ்ந்து இருக்கின்றோம். ஒவ்வொரு "ஆம்" என்பதும் அதற்குச் சமமான "இல்லை" என்பதைக் கொண்டதாக உள்ளது.*

*தேவன் கெத்செமெனேயில் தமது அன்பார்ந்த மகனுக்கு மூன்று முறை "இல்லை" என்று கூறினார். 2 கொரிந்தியர் 12:8, 9ல் பவுலின் முள் பற்றிய விஷயத்திற்குத் தேவன் அவரிடம் மூன்றுமுறை "இல்லை" என்று கூறினார். சிலவேளைகளில், ''இல்லை'' என்பது மிகச்சிறந்த பதிலாக உள்ளது. ஜெபத்தில் நாம் தேவனுடன் பேசுகின்றோம் - நாம் தேவனை "சூழ்ச்சி யினால் வெல்வதற்கு" முயற்சி செய்வதில்லை. ஜெபத்தில் நாம் தேவனு டைய பதிலை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அதை நாம் நம்பு கிறோம். இயேசு தமது ஜெபத்தின் மூலமாக எதைப் பெற்றுக் கொண்டார்? கல்வாரி!*

*(3) தேவன் ''காத்திருக்கின்றார்.'' லூக்கா 1ல் நாம் மனங்கவரும் வரலாறு ஒன்றைக் காண்கின்றோம். சகரியாவும் எலிசபெத்தும் விசுவாசமிகுந்தவர் களாய் இருந்தார்கள். ஆயினும், அவள் மலடியாக இருந்தாள். அநேக ஆண்டுகளாக அவர்கள் ஒரு குழந்தை வேண்டும் என்று தேவனிடத்தில் ஜெபித்தார்கள். அவர்கள் இன்னும் - கசப்புணர்வுடன் - ஜெபித்தார்கள். ஒரு தூதன் சகரியாவுக்கு ஒரு குழந்தை பிறக்கும் என்று வாக்களித்தார். அவர் [சகரியா] மெய்சிலிர்த்துப் போகவில்லை! ஏன்? ஏனென்றால் அவர் இருபது ஆண்டுகளுக்கு முன்பே அந்தக் குழந்தை வேண்டும் என்று விரும்பி யிருந்தார்! நம்மில் மிகப் பலர், நமது கால அட்டவணையின்படி தேவன் செல்ல வேண்டும் என்று அவரிடம் கேட்கின்றோம். தேவனுடைய காலம் வித்தியாசமானதாக இருக்கலாம். "உரத்துச் சத்தமிடாத வாய் மூடப்படும்!" யோவான் ஸ்நானன் பிறக்கும் வரையிலும் சகரியா பேச்சற்றவராயிருந்தார். என்ன ஒரு மகன்! அவர்கள் கர்த்தருக்காகக் காத்திருக்க மனமற்று இருந்தார்கள், ஆனால் ''காலம் நிறைவேறினபோது'' தேவன் அவர்களுக்குக் கொடுத்த மகனை கண்ணோக்குங்கள்!*

*ஆதியாகமம் 18:23-32ல் ஆர்வத்திற்குரிய இன்னொரு ஜெபம் உள்ளது. சோதோமைக் காக்கும்படி ஆபிரகாம் ஜெபித்தார். அவர் தேவனுடன் பேரம் பேசினார். ஐம்பது - ஆம், பத்து நீதிமான்கள் இருந்திருந்தாலும் கூட சோதோம் காக்கப்பட்டிருக்கக் கூடும். பின்பு ஆபிரகாம் அதை விட்டு*

*விட்டார்! ஐந்து, இரண்டு அல்லது ஒருவர் இருந்திருந்தால் கூட சோதோம் காக்கப்பட்டிருக்கக் கூடுமா? யாருக்கும் தெரியாது ... ஏனென்றால் ஆபிரகாம் கர்த்தருக்குக் காத்திருப்பதை விட்டுவிட்டார்.*

*எரேமியா 42:4-7ல் தேவன் எரேமியாவின் ஜெபத்திற்குப் பதில் அளித்தார், ஆனால் அவர் அதைச் செய்வதற்குப் பத்து நாட்கள் காத்திருந்தார். இயேசு, ஜெபம் பற்றிய தமது கொள்கைகளில், உறுதியாய் இருத்தலை குறித்துப் பல பாடங்களைப் போதித்தார். நீங்கள் நம்புவதை விட்டுவிடும் போது, ஜெபிப்பதை விட்டுவிடுகின்றீர்கள். கீழே ஆழமாக, நாம் ஜெபத்தில் உண்மையிலேயே நம்பிக்கை வைக்கின்றோமா? "முழந்தாள்களில் இருக்கும் கிறிஸ்தவர், குதி உயர்த்தி நடக்கும் தத்துவ ஞானியை விட மேலானவராகக் காணப்படுகின்றார்.'' (இது அகஸ்டஸ் டோப்லேடி என்பவரால் கூறப்பட்டது.)*

*ஜெபிப்பதை விட்டுவிடாதீர்கள்.*
*பதில் வரத் தாமதித்தால்,*
*காத்திருங்கள். தேவன் வருவார்,*
*அவர் ஒருபோதும் மிகவும் தாமதமாக*
*வர முடியாது.*

*(4) தேவன் "பதிலீடாக ஒன்றைத் தருகின்றார்.'' அவர் வேறுபட்ட ஒன்றை, அல்ல இன்னும் சிறப்பான ஒன்றை அனுப்புகின்றார் - அவர், நாம் கேட்டதற்கும் அதிகமானதை நமக்குத் தருகின்றார். பாலஸ்தீனத்தின் உள்நுழைய வேண்டும் என்று மோசே ஜெபித்தார். அவரது வேண்டுகோளை தேவன் அனுமதிக்கவில்லை, ஆனால் பிஸ்காவின் கொடுமுடியில் இருந்தும் மறுரூப மலையில் இருந்தும் மோசே பாலஸ்தீன நாட்டைக் காணும்படிக்குத் தேவன் அனுமதித்தார். இயேசு லாசருவைக் குணமாக்க வராதிருந்தார், ஆனால் அவர் லாசருவை மரித்தோரில் இருந்து உயிருடன் எழுப்பினார் (யோவா. 11:43, 44). மார்த்தாள் இயேசுவை உயிர்த்தெழுதலும் ஜீவனுமாகக் காணும்படிக்கே அவர் லாசருவை உயிருடன் எழுப்பினார். அழுதுபுலம்பிய ஒரு பெண்ணிடத்தில் உயிர்த்தெழுதலைப் பற்றிய மாபெரும் போதனை இயேசுவால் தரப்பட்டது. பிள்ளைகள் விரும்புவதைப் பெற்றோர்கள் தரமுடியாத போது, அவர்கள் சில வேளைகளில் அதைவிட மேன்மையானதைப் பதிலீடாகத் தருகின்றார்கள். இந்த விஷயத்தைப் பற்றிப் பவுல், ரோமர் 8:31, 32ல் விவரித்தார்: "இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால், நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும், அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி?"*

*உள்நாட்டுப் போரில் அரசியல் கூட்டமைப்பின் படைவீரர் ஒருவர் இதை நன்கு எடுத்துரைத்தார்:*

*நான் சாதிக்கக் கூடும்படி தேவனிடம் பெலத்தைக் கேட்டேன்,*

*நான் தாழ்மையுடன் கீழ்ப்படியக் கற்கும்படி பலவீனனாக்கப் பட்டேன் ...*
*நான் மிகப் பெரிய விஷயங்களைச் செய்யக்கூடும்படி தேவனிடம் உடல் நலத்தைக் கேட்டேன்,*
*நான் மேன்மையானவற்றைச் செய்யும்படி நோயாளியாக்கப் பட்டேன்.*
*நான் மகிழ்ச்சியாய் இருக்கும்படி செல்வங்களைக் கேட்டேன்,*
*நான் ஞானவானாகும்படி வறுமை தரப்பட்டேன்.*
*நான் மனிதரால் புகழ்ச்சியைப் பெறும்படி அதிகாரத்தைக் கேட்டேன்,*
*நான் தேவனுடைய தேவையை உணரும்படி பலவீனம் அளிக்கப் பட்டேன்,*
*நான் வாழ்வை மகிழ்வுடன் அனுபவிக்க எல்லா விஷயங்களையும் கேட்டேன்,*
*நான் எல்லா விஷயங்களையும் அனுபவிக்கும்படி நான் வாழ்வு அளிக்கப்பட்டேன்.*
*நான் கேட்ட எதுவும் பெற்றுக்கொள்ளவில்லை, ஆனால் நம்பியிருந்த ஒவ்வொன்றையும் பெற்றுக் கொண்டேன்.*
*என்னைக் குறித்துப் பொருட்படுத்தாமல், எனது பேசப்படாத ஜெபங்கள் பதில் அளிக்கப்பட்டன.*
*எல்லா மனிதர்களின் மத்தியிலும் நான் வளமாக ஆசீர்வதிக்கப் பட்டேன்.*

*சாலொமோன் ஞானத்தைக் கேட்டார் (1 இரா. 3:6-9). தேவன் அவருக்கு ஞானத்தை மட்டுமின்றி செல்வங்களையும், சமாதானத்தையும், வல்லமையையும் கொடுத்தார். மனிதன் தனது சிறிய ஜெபங்கள் பதில் அளிக்கப்படாதபோது, பெரும்பாலும் ஏமாற்றம் அடைகின்றான். மனிதனின் ஜெபங்கள் மிகவும் சிறியதாக இருக்கும்போது, தேவன் ஏமாற்றம் அடைகின்றார்.*

*(5) தேவன் "நம்மை மாற்றுகின்றார்." தேவன் நம்மை மாற்றுகின்ற காரணத்தினால், ஜெபம் சூழ்நிலைகளை மாற்றுகிறது. நம்மை மாற்றுதல் என்பது சூழ்நிலைகளை மாற்றுவதை விடப் பெரிதானதாக உள்ளது. யாரோ ஒருவரில் விசுவாசம் வைத்திருப்பது என்பது, அந்த யாரோ ஒருவருக்கு உங்களையே கொடுப்பதாகிறது. நாம் ஜெபிக்கும்போது, நாம் மாறத் தயாராக இருக்க வேண்டும். நாம் ஜெபிக்கும்போது ஏற்படும் விளைவானது நாம் ஜெபிக்காதபோது ஏற்பட்டிருக்கும் விளைவில் இருந்து மாறுபட்டதாக உள்ளது. நாம் பிரச்சனைகள் குறையவேண்டும் என்றல்ல, ஆனால் பெலம் அதிகரிக்க வேண்டும் என்று ஜெபிக்க வேண்டும். நாம் இலகுவான சுமைக்காக அல்ல, ஆனால் வலிவான அகலமான தோள்களுக் காக ஜெபிக்க வேண்டும். பதில் அளிக்கப்பட்ட ஜெபத்தில், ஆசீர்வாதங்கள் என்பதல்ல ஆனால் தேவன் நமது வாழ்வில் செயல்படுவதைக் காண்ப தென்பதே மாபெரும் அற்புதமாக இருக்கிறது. தேவன் நமது வாழ்வில் செயல்படுகின்றார் என்பதைக் காணுதல் பயபக்திக்கு உரியதாக உள்ளது! ஜெபித்தல் என்பது மாற்றத்திற்கானதாக, தேவனிடத்தில் திறந்தவர்களாய் இருப்பதற்கானதாக உள்ளது.*

*(6) தேவன் நமக்கு "தேவனை" கொடுக்கின்றார். தேவன் சில பதில் களைக் கொடுத்தால், நம்மால் அவற்றை உண்மையில் கையாள முடியாது. நமக்கு விளக்கங்கள் தேவையில்லை - நமக்கு தேவனே தேவையாக உள்ளார்! தேவனே! தேவன் தாமே வருகின்றார்! தேவன் சர்வ-வல்லமை யுள்ளவராகையால் ஜெபம் வல்லமை நிறைந்ததாக உள்ளது. ஜெபம் நம்மை தேவனுடைய பிரசன்னத்தில் வைக்கிறது. நாம் தேவனுடன் அதிகமான நேரத்தைச் செலவிடும்போது, நாம் அதிகமாக தேவனைப் போல் ஆகின்றோம். நாம் ஆராதிக்கின்ற தேவனைப் போன்றவர்களாகின்றோம். தேவன், மோசேயிடம், தாவீதிடம், யோபுவிடம், தீர்க்கதரிசிகளிடம், பவுலிடம் வந்தார். தேவனுடைய பிரசன்னம் என்பதே ஜெபத்திற்கான மாபெரும் பதிலாக உள்ளது. தேவன் நமக்கு என்ன "செய்கின்றார்" என்பதைக் காட்டிலும், அவர் நமக்கு என்னவாக "உள்ளார்" என்பதே ஜெபத்திற்கான மாபெரும் பதிலாக உள்ளது.*

*எந்த வழிமுறைகளில் என்று நான் அரிதாய்க் கூட அறியாதிருப்பினும்,*
*தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கின்றார் என்பதை நான் அறிகின்றேன்.*
*அவர் தமது வசனத்தைக் கொடுத்துள்ளார் என்று நான் அறிகின்றேன்.*
*அது, என்ஜெபம் எப்போதும் கேட்கப்படுகிறது என்று எனக்குக் கூறுகிறது.*
*விரைவாகவோ அல்லது தாமதமாகவோ எனக்குப் பதில் அளிக்கப்படும்;*
*எனவே நான் ஜெபிக்கின்றேன், அமைதியாய்க் காத்திருக்கின்றேன்.*

*நான் நாடுகின்ற ஆசீர்வாதங்கள் நான் நினைத்தவாறு அப்படியே வருமா என்று நான் அறிவதில்லை;*
*ஆனால் என் ஜெபத்தை நான், என்னிலும் ஞானமுள்ளவரின் சித்தத்திற்கு அப்படியே ஒப்புவிக்கின்றேன்.*
*எனது வேண்டுகோளை அவர் நிறைவேற்றுவார், அல்லது*
*அதனிலும் அதிக ஆசீர்களினால் பதிலளிப்பார் என்று உறுதியாய் இருக்கின்றேன்.*

எலிசபெத் V. ஹிக்காக்

*"ஆண்டவரே, நான் ஜெபத்தில் நம்பிக்கை கொள்ளுவதில்லை. நான் உம்மை நம்புகின்றேன். விசுவாசத்துடன் ஜெபிக்க எனக்குப் போதியும்."*